International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 04 October to December 2022 www.irjtsjournal.org

# தமிழ் பக்தி இலக்கியங்களில் பெண் மொழி: ஆண்டாள் பாசுரங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

## (The Language of Women in Tamil Devotional Literature: with Special Reference to Andal's Poems)

விஜிதா திவாகரன்

*சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்க் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்:***

*தமிழ் பக்தி இலக்கியங்களில் பெண்களின் பங்களிப்புகள், அவர்களின் அனுபவங்கள் மற்றும் பெண்ணியப் பரப்பில் பக்தி இலக்கியங்களின் செல்வாக்குகள், பெண் மொழி என்பன குறித்து ஆண்டாளின் பாசுரங்களை அடிப்படையாகக் கொண்டு இங்கு ஆராயப்படுகின்றது. பெண்ணிய நோக்கில் ஆண்டாளின் பாசுரங்களை எடுத்து ஆராய்வதனை நோக்காகக் கொண்டமையும் இவ் ஆய்வில் ஆண்டாள் போன்ற பெண்சார்ந்த படைப்புக்களின் படைப்பு முறைமைகள், இலக்கியக் கருப்பொருள், வெளியீட்டு உத்திகள், மொழிநடை, இலக்கிய மரபுகள் என்பன பற்றியும் எடுத்து நோக்கப்படுகின்றது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் முதன்மையான பெண் படைப்பாளிகளில் ஒருவராக ஆண்டாள் விளங்குகின்றார். நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவைதிகமத நெறிகளுக்கு எதிராகப் பக்திசார்ந்த அமைப்புக்களாக நின்று செயற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரேயொரு பெண் ஆழ்வாராக ஆண்டாள் அடையாளம் காணப்படுகின்றார். ஆண்டாள் நாச்சியார் திருமொழி, திருப்பாவை எனும் இரு நூல்களைப் பாடியுள்ளார். இவரின் படைப்புக்கள் பக்தி, காதல் என்ற தளங்களுக்கும் அப்பால் சென்று பெண்கள் குறித்த ஆண் நோக்கிலான பார்வையிலிருந்து விலகிய பெண்நிலைசார்ந்த அதாவது பெண்ணியநிலைசார்ந்த, பெண் பார்வையிலான பெண்மையப் படைப்புக்களாகவும், பெண்ணின் தன்நிலைக் குரலாகவும் தமிழ்ப் படைப்புத்தளத்தில் முக்கியமான பதிவுகளை நிகழ்த்தியுள்ளன.*

***முதன்மைச் சொற்கள்:*** *ஆண்டாள், தமிழ்ப் பக்தி இலக்கியம், பெண்மொழி*

'ஆண்டாள்' எனும் நாமம் தமிழிலக்கியப் பரப்பில் ஆழவேரூன்றியதும், அடிக்கடி விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்படும் ஒரு பெண்ணின் பெயர். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, கோதையார், நாச்சியார் என்றெல்லாம் பல்வேறு நாமங்களில் தமிழுக்கு அறிமுகமாகும் ஆண்டாள் 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி' ஆகிய தனது படைப்புகள் மூலம் தமிழ்க்கவிதைப் பரப்பில் தனக்கென ஒரு தனித்துவமான தளத்தை உருவாக்கிக்கொண்டாள். கோதை கண்ணனையே ஆண்டுவிட்டதால் அவள் 'ஆண்டாள்' ஆனாள். ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை இறைவன் விரும்பி ஏற்றதனால் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'யானாள். நற்றமிழால், நல்லிசையால் இறைவனைப் பாடிப்பரவியதால் பாடவல்ல 'நாச்சியார்' ஆனாள்.

ஆண்டாளினுடைய வளர்ச்சியைப் போலவே அவள் கண்ணன் மீது கொண்ட பக்திக் காதலும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வந்தது. கண்ணனையே தன் மணாளனாக மனதிலே நிலைநிறுத்தி அவனை நினைத்த வண்ணம் வாழ்ந்தாள். இந்நிலையில் அவள் கண்ணனுடைய ஆயர்பாடியையும் கோபிகையையும் கற்பனையில் உணர்ந்து தன்னையும் அந்தப் பெண்களுள் ஒருத்தியாகக் கற்பிதம் செய்து கண்ணனிடத்து அவள் பக்தியில் ஆழ்ந்து பாடிய உணர்வுப் பிரவாகமே 'திருப்பாவை'. கண்ணனைக் கைபிடிக்க உறுதிபூண்டு, அவன் காதலுக்காகவே ஏங்கித்தவித்து, தன்னுள் கண்ணனைக் கண்டு, கண்ணனுள் தன்னைக் கரைத்து நெஞ்சுருகிப் பாடிய கவிதையின் உணர்வு வெளிப்பாடே 'நாச்சியார் திருமொழி'. ஆண்டாள் இளமைப் பருவம் வந்து தலைகாட்டிய போது பாடியவை திருப்பாவை. நன்கு வளர்ந்த நிலையில் கண்ணனைத் தன் காதலனாக எண்ணிப் பாடிய பாடல்கள் நாச்சியார் திருமொழி என 'தமிழ்ப் பெருங்கவிஞர்' என்ற நூலில் சு. வேங்கடராமன் 'ஆண்டாள்' பற்றிய தமது கட்டுரையில் வெளியிடப்பட்டுள்ள அனுமானம் இங்கு குறிப்பிடத்தக்கது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

சிறுபராயத்திலிருந்து கண்ணனின் உருவச்சிலையைக் கண்டு வணங்கிய ஆண்டாளுக்கு அவனுக்குத் தொண்டு செய்யும் போதெல்லாம் இவனே என் வாழ்வில் மணாளனாக வரவேண்டும் என்று விருப்பப்பட்டாள். வழிபாடுகளும் நோன்புகளும் செய்தால் அவனைக் கணவனாக அடைந்துகொள்ளலாம் என்று அந்தப் பேதைச் சிறுமியின் மனம் எண்ணியதன் வெளிப்பாடே திருப்பாவை. காலப்போக்கில் - நனவு நிலையில் - அந்த எண்ணம் கைகூடாதபோது கனவு நிலையில் அவன் கைத்தலம் பற்றிக் கணவனாக்கிக் கொண்டு ஊடலும் உறவுமாக அவனோடு கொண்ட தொடர்பின் ஒளிவுமறைவற்ற உறவு நிலைகளை வெளிப்படுத்தி அவள் பாடியதே நாச்சியார் திருமொழி. இவளுடைய இக்காதற்பாக்கள் கண்ணன் மீதான தீராக்காதல், கிடைப்பானோ என்ற ஏக்கம், கிடைக்கமாட்டானா என்ற தவிப்பு, நாளெல்லாம் அவனை நினைத்து வருந்தும் துயரம், தன்னம்பிக்கையால் ஏற்படும் அமைதி, கண்ணனோடு ஐக்கியமுறுவதால் ஏற்படும் மகிழ்ச்சி போன்ற உணர்ச்சி நிலைகளைப் பிரதிபலிக்கின்றன. காதலுணர்வால் ஆட்கொள்ளப்பட்ட ஒரு பெண்ணின் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஆண்டாளின் கவிதைகளில் காணமுடிகின்றது. எனினும், ஆண்டாளை ஆண்டாளாக தமிழ்க்கவிதை உலகில் பிரதிநிதித்துவப்படுத்தி நிலைநிறுத்துவது அவளுடைய நாச்சியார் திருமொழியே ஆகும்.

தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் சங்கப் பெண்பாற்புலவர்களை அடுத்து நீண்டதோர் இடைவெளிக்குப் பின்னர் பெண் இலக்கிய கர்த்தாக்கள் அருந்தலாகவே உள்ளநிலையில் வலுவான சமயப் பின்புலத்தோடு கூடிய படைப்புநிலை அங்கீகாரம் பெற்றவளாகவும், பெண்ணின் அகமனவுணர்வுகளை முன்நிறுத்திப் பாடியவர்களுள் சிறப்புற்றுத் திகழ்பவளாகவும் ஆண்டாள் முதன்மை நிலை பெறுகிறாள்.

ஆண்டாளின் புலமையாளுமைக்கு இயங்கு தளமாக அமைந்தது அவளது பக்தி உணர்வின் வெளிப்பாடு. 'பக்தி' என்பது ஒருவர் இறைவனோடு ஆழ்நிலைப்பட்ட நிலையில் உறவு கொள்வதாகும். கடவுளை மானிட நிலைப்படுத்தி அவரை ஆண்டானாகவோ, தந்தையாகவோ, காதலனாகவோ, கணவனாகவோ, நண்பனாகவோ பார்த்து அந்த உறவு நிலைக்கேற்ற அந்நியோன்னியத்துடன் இறைவனைப் பாடுவது பக்தி இலக்கியத்தின் பண்பு. இந்த ஆழ்நிலைப்பட்ட பக்தி வெளிப்பாட்டிற்கும் ஆக்கநிலைக் கவர்ச்சிக்கும் அற்புதமான ஆதாரங்களாகவே ஆண்டாளின் பாடல்கள் விளங்குகின்றன.

தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பெண்களின் அக மனவுணர்வு நிலைகளை முன்நிறுத்திப் பாடும் கவிதை மரபினை ஆண்கள் எவ்வளவுதான் பெண்ணுணர்வுநிலையில் நின்றும், அதனுள் புகுந்தும் வெளிப்படுத்த முற்பட்டாலும் பெண்மையின் உண்மையான ஆத்மார்த்த உணர்வு மையங்களைத் தொட்டுணர்த்தவோ, உணர்வு நேர்மையுடன் வெளிப்படுத்தவோ அவர்களால் முடியாது போயிருப்பதை அவதானிக்கலாம். பெண் பெண்ணாக நின்று உருகும்போதுதான் பெண்மையின் மெய்மைநிலை உணர்வோட்டங்களையும், அவற்றின் நதிமூலங்களையும் வெளிக்கொணரமுடியும்.

பெண் பெண்ணாக நின்று உருகுவதை விதந்தோதாத இறுக்க நிலை கொண்ட இலக்கிய மரபிலும் தனது அக மனவுணர்வினை புலமைத்துவ நேர்த்தியுடன் வெளிப்படுத்திய பெண்கள் எம் மரபில் இல்லாமல் இல்லை. எனினும், அவர்களது பெண்ணிலைப் புலமைசார் வெளிப்பாடுகள் பெண்ணை பெண்ணின் நோக்குநிலையிலிருந்து தரிசிப்பதற்கான வாய்ப்பினைத் தரவில்லை என்று தான் கூறவேண்டும்.

இப்பெண்கள் அனைவருமே, பெண்கள் மீது திணிக்கப்பட்ட மரபுகளாலும் மரபுசார் விழுமியங்களாலும் பாதிப்பிற்கு ஆளானவர்கள். அவற்றுக்கு வடிகால் தேடும் முயற்சியாகத் தங்கள் வாழ்க்கை அனுபவங்களையும், அவற்றால் உணர்ந்த மனக்காயங்களையும் தங்கள் எழுத்துக்களில் இறக்கி வைத்திருப்பவர்கள். உடலையும், பாலியலையும் வெறுத்து ஒதுக்கியதன் குறியீடாகப் பேய் வடிவம் பூண்டு தன் எதிர்ப்பைக் காட்டி சமயம் என்ற தளத்தில் நின்று பக்தியினூடாக மறைபொருளாகத் தன் எதிர்ப்புக் குரலைப் பதிவுசெய்த காரைக்காலம்மையாரும் ஆணாதிக்க சமூக மதிப்பீடுகளுக்கு அடங்கிப் போன பெண்மையின் ஒரு சோகக் குரலாகவே ஒலிக்கின்றார். இதற்கு மாறாக - இதுவரையில் - உடல்சார்ந்ததாகவும், பாலியல் சார்ந்ததாகவும் சமூகத்தில் உருவாக்கப்பட்டிருந்த பால் பேதம் கொண்ட அனைத்து கலாசாரக் கட்டுமானங்களையும் தகர்த்தெறிந்து தன் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பவள் ஆண்டாள் என்று எம். ஏ. சுசீலா குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

பொதுவாக தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் ஒரு பெண்ணானவள் தனது அகவுணர்வை உண்மைநிலையில் நின்று உள்ளபடி வெளிப்படுத்தவும், அகவெளியைத் திறந்து காட்டவும் அச்சமும் நாணமும் அடைகின்றாள். ஆனால் ஆண்டாளோ எவ்வித தடைகளுமின்றி நேரடியாகவும் துணிச்சலாகவும் அகவெளி உணர்வுகளை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துவதை அவளது கவிதைகளின் வழி அவதானிக்க முடிகின்றது. அதாவது பெண்ணை பெண் நோக்கு நிலையிலிருந்து அறிந்து கொள்வதற்கு இருந்த பண்பாட்டுத் தடைகள் யாவற்றையும் உடைத்துத் தனது அகரீதியான

மனவுணர்வுகளை புலமைத்துவத்தோடும் கலாபூர்வமான நேர்த்தியோடும் வெளிப்படுத்தியுள்ளார். நெஞ்சை நெருப்பாக்கும் காதல் உணர்ச்சியின் தன்மையும் அத்தகைய உணர்ச்சியுடன் காதலிக்கும் மணாளன் என்று கொண்டவன் மீது எழும் பாசத்தின் பரிமாணங்களையும், அவனுக்காக ஏங்கித் தவிக்கும் பெண்களின் அவஸ்தைகளையும் வெற்றியுடன் ஆண்டாள் பாடிய தெய்வக்காதல் பாட்டுக்களைப் போல் தமிழில் வேறில்லை" என்கின்றார் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.

மரபுசார்ந்த பக்தியிலக்கியப் பாடல்களின் பாதையிலிருந்து சற்றே விலகி மொழிதலில் புன்னகையும் அடக்கப்பட்ட ஒரு பெண்ணின் பாலுணர்வின் சோகமும் பற்றிய சிந்தனைக்கு அடித்தளம் அமைக்கும் போக்கில் ஆண்டாளின் பாடல்கள் அமைந்திருப்பதனை அப்பிரதிகளை மறுவாசிப்பிற்கு உட்படுத்துகையில் விளங்கிக்கொள்ளமுடிகின்றது. ஆண்டாளின் கவிதைகளில் தென்படும் பண்பாட்டு மாற்றத்திற்கான மூல வேர்கள், அவளது பிறப்புப் பின்னணியிலேயே பொதிந்து கிடப்பதனை முதலில் இனங்காணமுடிகின்றது.

ஆண்டாளின் மீது மகாலட்சுமியின் அவதராம் என்று தெய்வத்தன்மைகள் ஏற்றப்பட்ட போதும், 'திருமகள்' போல பெரியாழ்வார் அவளை வளர்த்தபோதும் பெரியாழ்வாரால் துளசிச்செடியின் அடியில் கண்டெடுக்கப்பட்ட அநாதைக் குழந்தையாகவே 'குரு பரம்பரை நூல்' ஆண்டாளின் பிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவள் வாழ்ந்த காலகட்டத்தில் சாதாரண பெண்களுக்குக் கிடைக்கக்கூடிய இயல்பான வாழ்க்கை முறை - சாதி, குலம் ஆகியவற்றுக்கு முதன்மையளிக்கக்கூடிய ஒரு சமூக அமைப்பில் - பிறப்புப் பின்னணி தெரியாத பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான அவளுக்கு மறுக்கப்பட்டிருக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை நிராகரிப்பதற்கில்லை.

தாய் தந்தையுடன் சேர்ந்து வாழும் இயல்பான குடும்பச் சூழலைப் பற்றியோ, அவர்களின் அன்பைப் பற்றியோ, சகோதர பாசத்தைப் பற்றியோ அறிந்திருக்க வாய்ப்பில்லாத ஆண்டாளுக்கு, கண்ணனையே பரம்பொருளாகக் கருதும் வைணவ பக்திச் சூழலிலே பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்டதனால் கண்ணனின் உருவமே அவளுக்கு அனைத்துமாகத் தோன்றியது. அறியாப்பருவத்திலிருந்து தன் மனதில் நிலைநிறுத்தப்பட்டு அவளின் விருப்பத்திற்கேற்ப உருவாக்கி உலவவிடப்பட்ட கண்ணபிம்பம் அவளுடைய இளமை உணர்வுகள் விழித்துக்கொண்ட போது காதலன், மணாளன், நாயகன் ஆகிய ரூப உச்சங்களை எட்டுகின்றது. தன் மனதின் எண்ண அலைவரிசைக்கு ஏற்றவாறு அமைந்து போன கண்ணன் என்ற ஆண் பிம்பத்தை தன் விருப்பு வெறுப்புகளுக்கும், மனவோட்டங்களுக்கும் ஏற்றவாறு புனைந்துகொண்டு அதனூடாக புலப்படுத்தப்படும் அடக்கப்பட்ட பாலுணர்வின் சோகநிலைகளை வெளியிடுவதில் அவளுக்கு எந்தவித மனத்தடையும் இருக்கவில்லை.

அன்பிற்காக ஏங்கித் தவிக்கும் உள்ளத்திற்கு அவளுடைய மனக்கண்ணிலே தென்பட்ட கண்ண பிம்பத்தையே தனக்குரிய அனைத்துமாகக் கருதியதன் விளைவாகவே அவள் கண்ணன் மீது நம்பிக்கை கொள்ளல், உரிமை கொள்ளல், காதல் கொள்ளல், தன்னை ஒப்புவித்தல் என்று எல்லா செயல்களையும் உணர்வுகளையும் அவனுக்காகவே கருதி எந்தவித வரையறைகளுக்கும் உட்படாத விதத்திலும் மனம்போன போக்கிலும் எந்த நேரத்தில், எந்த வேளையில் எப்படியெல்லாம் கண்ணனைத் தரிசிக்க வேண்டுமோ அந்த நிலையில் அவள் கண்ணனை உருமாற்றியிருக்கின்றாள் என்பது தான் புலனாகின்றது. அம்மையும் நீயே, அப்பனும் நீயே, அத்தனும் நீயே, எல்லாம் நீயே என்று தன்னுடைய வாழ்வில் கண்ட கண்ணன் என்ற ஒரு பொருளைப் பலவாறு மாற்றியமைக்கும் பாவனா சக்தியும் மனோபலமும் ஆண்டாளின் கவிதைகளில் தொனிக்கின்றது. இவ்வாறு பல்வேறு நிலைகளில் கண்ணனோடு ஐக்கியமுறும் ஆண்டாள் அவனைத் தனக்கு ஒத்த சமநிலையில் வைத்து நண்பனாகவும், காதலனாகவும், மணாளனாகவும், தலைவனாகவும் இவற்றையெல்லாம் விட பிறவிதோறும் தன்னைச் சேரும் பிறவிக் காதலனாகவும் காணுகின்றாள்.

அடிப்படையில் உண்மையாகவே ஒருவருக்கொருவர் தம்மை ஒப்புவித்து புரிந்துணர்வும், அன்பும், உரிமையும் கொண்டு வாழும் வாழ்க்கையில் தம்மை கணவன் மனைவியாகவோ, தாய் தந்தையாகவோ, நண்பன் நண்பியாகவோ, காதலன் காதலியாகவோ, குரு சீடனாகவோ, குழந்தையாகவோ, சகோதரன் சகோதரியாகவோ இன்னும் தமக்கு விரும்பிய, வேண்டிய விதத்தில் வடிவங்களை உருமாற்றிக்கொள்வதில் தவறில்லை. இதனையே நாயன்மார்கள், ஆழ்வார்கள் இறைவனை தமக்கு ஏற்ற நிலையிலும் விரும்பிய விதத்திலும் பாவனை செய்து பாடியிருப்பதனை அவர்களின் பாடல்களில் காணலாம். ஆனால் காரைக்காலம்மையார், ஆண்டாள் ஆகியோரைத் தவிர ஏனைய நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனை பல்வேறு ரூபங்களில் பாவனை செய்து பாடினாலும், அடிப்படையில் அவர்கள் அனைவரும் ஆண்கள் என்பதனாலும் சிவன், விஷ்ணு ஆகிய ஆண் தெய்வங்களைக் குறித்தே பாடுவதனாலும் யதார்த்தரீயாக எவ்வளவு தூரம் அவர்களின் உணர்வு சாத்தியமானது என்பது சிந்திக்கத்தக்கது. ஆனால் பிறப்பினாலேயே பெண்ணாக இருந்து கண்ணன் என்ற ஆண் தெய்வத்தை நோக்கி நாயக - நாயகி

பாவனையில் பாடும் ஆண்டாளின் பாடல்களில் நாயக - நாயகி பாவனை என்கின்ற கவசங்களும் முகமூடிகளும் கழன்று போய் ஆண்டாள் என்ற தனிப்பட்ட பெண்ணின் அந்தரங்க உணர்வுவெளிப்பாடுகளாக உண்மைக்கு மிகப் பக்கத்தில் வந்துவிடுவனவாகவே அவள் கவிதைகள் திகழ்கின்றன.

ஆண்டாள் உலகியலில் காணக்கூடிய சராசரி மனிதர்களைப் போலவே பருவ வளர்ச்சிக்கேற்ப உடலால், அழகால், உணர்ச்சியால் மாத்திரமே வரவில்லை. ஞானம், பக்தி, வைராக்கியம் முதலியனவும் முதிர்ந்து வளர்ந்து வந்தாள். அவளுக்குத் தான் காதலித்த கண்ணனை அடையவேண்டும் என்ற வேட்கை மிக மிக அதிகமாயிற்று. அவனைப் பிரிந்து தரித்திருக்க அவளால் சிறிதும் முடியவில்லை கூடிக்களிக்கவும் முடியவில்லை மறந்து விடவும் முடியவில்லை. சில சமயங்களில் - ஏன் பல சமயங்களில் அம்மாயக் கண்ணன் அவள் மனக்கண் முன் தோன்றுவான் அலைக்கழிப்பான் ˙ மறைவான். அவனைத் தழுவத்துடித்த ஆண்டாளுக்கு அவன் திருமேனி கிடைக்கவில்லை. அக்கண்ணனை அறிய விரும்பிய அவளுக்கு அப் பரம்பொருளின உண்மைப்பெருமை புலப்படவில்லை. ஆயினும் அவள் சித்தத்தில் அவன் கோயில் கொண்டிருந்தான்.

தமிழ்க்கவிதை உலகில் உச்சங்களில் ஒன்றாக விளங்கும் நாச்சியார் திருமொழியில் பிரபக்தியில் ஏற்படும் ஆன்மாவின் ஆனந்த நிலை பதிவாகியுள்ளது. கண்ணனிடம் தமக்காகப் பரிந்து பேசி அவனிடம் தம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்குமாறு காமனை வேண்டும் போதும், ஆயர்களில் ஒருவராகத் தன்னைப் பாவனை செய்து சிற்றிலைச் சிதையாதே எனக்கூறும் போதும், கண்ணனுக்குத் தோழிகள் மூலமாகவும் பறவைகள் மேகங்கள் வாயிலாகவும் தூது அனுப்பும் போதும், கண்ணன் தன் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை என்று இயற்கைப் பொருள்களிடம் கூறி முறையிடும் போதும் அவள் கொண்டிருந்த ஊடலும் அமைதியான இன்ப ஈடுபாடும், வருங்காலத்தில் கண்ணனை அடையலாம் என்ற நம்பிக்கை அடி மனதில சுடர் விடுவதோடு, கண்ணனை மணந்துகொண்டு அவனோடு கூடி இன்பவாழ்க்கை நடத்துவதாகக் கனவு கண்டு, அக்கனவைத் தோழியர்க்கு எடுத்துரைத்து கண்ணன் இருக்குமிடத்திற்குத் தம்மை அழைத்துச் செல்லும் போதும் தலைவனைக் கண்டீர்களா என்று எதிர்ப்பட்டவர்களை எல்லாம் வினாவும் போதும் அவளின் ஆழ்நிலை உறவு ஊடாட்டம் துலக்கம் பெறுகின்றது.

மேலும், அவன் மேனி வண்ணத்தில் ஆழ்ந்து நுண்பரிப்பு நிலையில் கரைந்து வரும் அவள் உணர்வானது,

“.....கருவுடை முகல்வண்ணன் காயாவண்ணன்

கருவிளை போல்வண்ணன் கமலவண்ணத்

திருவிடை முகத்தினில் திருக்கண்களால்

திருந்தவே நோக்கெனக்கு அருள் கண்டாய்” (நா. திருமொழி: 1:6)

என வெளிவரும் போது கண்ணனுடன் அவள் கொள்ளும் அகமன உறவுநிலை தெரிகின்றது. ஒரு வைணவ காதல் யுவனுக்கும் யுவதிக்கும் எப்படித் திருமணம் நடக்குமோ அத்தகைய ஒரு படிமத்தைத் தனக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடப்பதாக கனவுகண்டு கூறுவதாக அமையும்

‘வாரணமாயிரம்’ என்ற திருமொழியில் விளக்குகின்றாள்.

“இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்

நம்மை உடையவன் நாராயணன் நம்பி

செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி

அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான் (நா. திருமொழி:6:8)

என்கின்றாள். இங்கு நிறைவான பண்பாட்டிற்கும் பண்பாட்டு விழுமியங்களும் பெண்ணிய உணர்வை இலக்கிய கனதியோடு அழகியல் பதிவாகியுள்ளதனை அவதானிக்கலாம். திருமணத்தை எதிபார்க்கும் ஒரு பருவப்பெண் என்ற

வரையறையினுள் நின்று, ஒரு பெண்ணுக்கு திருமணம் எனும் சமூக சமயத் தேவையையும் இங்கு வலியுறுத்துகின்றாள்.

ஆண்டாளின் அடக்கப்பட்ட பாலுணர்வின் சோகத்திற்கும், கற்பிதப்புனைவுகளை உச்சக்கட்டமாக வளர்த்தெடுப்பதற்கும் முறையான திருமண பந்தத்தை அவளுக்கு அளிக்க மறுத்த அக்கால சமூக அமைப்பும் வலுவான ஒரு காரணமாகக் கூடும். ஒரு பக்கத்தில் பக்தி மேலீட்டின் தன்மை அதிகம் இருந்தாலும் மறுபுறம் அவளின் பாடலினூடாக வெளிப்படும் தீவிர மானிட வெறுப்பானது இக் கருத்தை வலியுறுத்துகின்றது. மரபுரீதியாக சமூகமும் அதனைச் சார்ந்தோரும் ஒரு பெண்ணிடம் எதிர்பார்க்கப்படும் அழகு, தோற்றப்பொலிவு அவற்றுக்கெல்லாம் மேலாக கல்வி, அதனால் விளைந்த ஆளுமையான கவித்திறன் ஆகிய அனைத்தும் தன்னிடம் இருந்தபோதும் பிறப்பின் மர்மத்தால் - பிறப்பைப் பற்றி அறியாதிருப்பதனால் - திருமணச்சந்தையில் தான் புறந்தள்ளப்பட்ட ஆழ்மன ஆவேசம், பக்திப் பின்னணியோடு ஒருங்கிணைந்து இயங்கியதன் விளைவே மனித ஆணுக்கு எதிரான எதிர்ப்புக் குரலாக அவளது பாடல்களில் எதிர்வினையாற்றியிருக்கின்றது எனலாம். தன் உடலை அவள் பெரிதும் மையப்படுத்துவதும், சிறுமானிடவர்க்கு அதனை உரியதாக்கமாட்டேன் என முழங்குவதும் கூட இதனோடு தொடர்புடைய சிந்தனைகளாகவே அமைகின்றன.

“மானிட வர்க்குஎன்று பேச்சுப்படில்

வாழகில் லேன்கண்டாய்.....” (நாச். திருமொழி : 1.5)

சாதாரணமாக, திருமணச் சந்தையில் ஒரு பெண்ணுக்கு அழகு, அறிவு இருந்தாலும் அவளது பிறப்பு, குலம், கோத்திரம், ஆகியன கருத்தில் கொள்ளப்படுவது யதார்த்தமானது. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக இருந்த ஆண்டாளுக்கு இவையாவும் கேள்விக்குறியாக இருந்ததனால் அவள் தொடர்பாக சமூகத்தில் பல கேள்விகள் எழுந்துள்ளன. இத்தகைய சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டுள்ள ஆண்டாளும் சமூகத்தினால் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டபோது சமூகம் மற்றும் ஆண்கள் குறித்த வெறுப்பும் எதிர்ப்பும் கொண்ட மனநிலையில் அவள் அவ்வாறு பாடியிருக்கலாம். உடலின் தேவைக்காக ஆணைச் சார்ந்தாக வேண்டியிருக்கின்றதே என்ற வெறுப்பும், அது கிட்டாதபோது எழும் சினத்தின் தீவிர வெளிப்பாடுகளாகவும் இத்தகைய கூற்றுகள் தென்படுகின்றன.

இளமைப் பருவம் முதல் கண்ணனைத் தன் காதலனாக, கணவனாக கற்பிதம் செய்து பாடிய ஆண்டாளுக்கு கண்ணனுடனான திருமண வாழ்வும், மெய்யுறுபுணர்ச்சியும் யதார்த்தபூர்வமாக நடைமுறையில் தனக்கு ஒருபோதும் கிடைக்காது என்பதை அவளது உள்மனம் உறுதியாக அறிந்திருந்தும், அவள் அவ்வாறு பாடுவதற்கு கற்புநெறி என்ற வலைக்குள் சிக்குப்பட்ட அவளின் நனவு மனமே காரணமாகும். கண்ணனையே மணவாளனாக நினைத்து அவனோடு ஐக்கியமாக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து அகரீதியாகக் கற்பனையில் அவன் மூலம் கிடைக்கும் சுக துக்கங்களை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண்டாளுக்கு, நனவு நிலையில் அந்த வாழ்க்கை உண்மையல்ல, என்னுடைய மனக்கற்பனைகளும் பாலியல் சார்ந்த பருவக்கோளாறுகளும் தான் அவை, எனக்கென்று இப்பூவுலகில் வாழ்க்கை ஒன்றை நான் அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற யதார்த்தபூர்வமான சிந்தனைகளுக்கு இடங்கொடுக்காமல் இருந்தது சமூகத்தில் நிலவிய கற்புப் பற்றிய வலுவான கோட்பாடு. ஏனெனில், கற்பு என்பது வெறுமனே உடல் சார்ந்தது மட்டுமல்ல, உள்ளமும் சார்ந்தது. அது பெண்ணிற்குரிய முக்கியமான அணிகலன்.

“பெண்ணிற் பெருந்தக்க யாஉள கற்பெனுன்னும்

திண்மையுண்டாகப் பெறின்” (குறள்: 54)

கற்பு என்னும் கலங்கா நிலைமை (உடல், உளரீதியாக) மட்டும் அமைந்திருக்குமானால், அக்கற்புடைய பெண்ணை விடப் பெருமையுடையவை வேறு எவை உள்ளன? என்பது தான் கற்பின் சாராம்சக் கோட்பாடு. ‘தற்காத்து’ (குறள்: 56), ‘மகளிர் நிறை காக்கும் காப்பே தலை’ (குறள்: 57) எனும் குறளகளில் வரும் சொற்றொடர்கள் கூட நிறைவுடை மகளிர் தம்மைத் தாமே காத்துக்கொள்ளும் காவல் தான் அவளுக்குப் பெருமையுடையது. தளர்ச்சியில்லாதவளே பெண் - கற்புடைய பெண் - அவள் உடல் ாதியாக மட்டுமல்ல, உளரீதியாகவும் தளர்ச்சியடையக்கூடாது என வலியுறுத்தும் கற்புக் கோட்பாட்டில் ஆண்டாளின் கண்ணன் மீதான காதல் உள்ளப்புணர்ச்சியை மட்டுமன்றி, மெய்யுறுபுணர்ச்சியையும் வேண்டிநிற்பதனால் அப் பெண் தன்னை இழந்துவிட்டாள் என்பது தான் கற்புக் கலாசாரம் பேசும் சமூகத்தில் அதற்கு அர்த்தம் கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் நின்று நோக்கும்போது அவள்

அகரீதியாகத் தான் கண்ணனோடு கொண்ட தீராக்காதல் மூலம் மாசுபடுத்தப்பட்டுவிட்டேன், அவனுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன், அவனுக்காக என்னையும் என் வாழ்நாளையும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றேன், எப்படி இன்னொரு ஆடவனுடன் என்னால் வாழமுடியும்? என்ற அச்சமும் வெறுப்பும் அவளை இவ்வாறு பாடியிருக்கச் செய்திருக்கலாம். பாலுணர்வினால் ஏற்படும் அன்பு என்பது உடல்சார்பும் உளச்சார்பும் கொண்டது. இதனை 'இதயத்தின் பசி' என்றும் 'ஆன்மாவின் தாகம்' என்றும் பாராட்டுகின்றனர். மனதிலே இன்னொருவரும் படுக்கையிலே இன்னொருவரும் என்று வாழும் வாழ்க்கை உன்னதமான திருமணமாகாது என்ற சிந்தனைப்புலத்தில் நின்றும் அவள் இவ்வாறு பாடியிருக்கலாம்.

மேலும், மானுட ஆணை நிராகரிக்கும் ஆண்டாளின் நனவிலி மனதில் தனது உடலும், மனமும் தனக்குச் சொந்தமானவை என்ற எண்ணத்தின் காரணமாக அவற்றை யாருக்கு அர்ப்பணிப்பது, அவற்றை யார் நுகர்வது என்பதை தானே தீர்மானிக்கவேண்டும் என்ற கொள்கையும் தன் எதிர்கால மணாளனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைத் தன்னுடையதாக்கிக்கொள்ளும் பெண்மையின் துணிச்சலும் புலப்படுகின்றது.

"கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்

பெண்ணிற் பெருந்தக்கது இல்" (குறள்: 1137)

கடல் போலக் காம நோயால் வருந்தியும் அதை வெளிப்படுத்தி நீக்குவதற்கு மடலேறாமல், அவ்வருத்தத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கும் பெண் பிறப்புப் போல பெருந்தகுதியுடைய பிறப்பு இவ்வுகத்தில் வேறில்லை என்ற கோட்பாட்டை உடைய சமூக மரபில், ஆண்டாள் தனது பாடல்களில் உடல்சார் வேட்கையை வெளியிடுவதைத் தவறாகவும் பாவமாகவும் கருதவில்லை. பாலியல் உணர்வுகளை வெளிப்படையாகச் சொல்வதில் அவளுக்கு எந்தவித மனத்தடையும் தயக்கமும் இருக்கவில்லை.

"காமத் திணையிற் கண்நின்று வரூஉம்

நாணும் மடனும் பெண்மைய வாதலிற்

குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை

நெறிப்பட வாரா அவள்வயி னான" (தொல்: களவியல் -10)

என்ற சூத்திரத்தில் பெண் தனக்கு ஏற்படும் காமத்தை நாணத்தால் மறைத்துக்கொண்டிருப்பாள். வாய் திறந்து ஒருபோதும் பகர்ந்தறியமாட்டாள். அவளது காமக் குறிப்பை ஆடவனே நுட்பமாக உணர்ந்து செய்றபட வேண்டும் என்ற அகத்திணைக் கொள்கை மரபில் நாச்சியார் திருமொழியில் உள்ள ஐந்தாம் திருமொழியாகிய குயிற்பத்தும், எட்டாம் திருமொழியாகிய மேகவிடுதூதும் கண்ணன் மீது அவளுக்கிருந்த காமமிகுதியையும் கண்ணனை அடையமுடியாமல் அவளுக்கு ஏற்பட்ட ஆற்றாமை, துயர உணர்வையும் மிகுதியாகப் புலப்படுத்துகின்றன. அன்புடைத் தலைவியின் காதல் நாண் இழக்கும் போது அது பொருந்தாக் காதலாகின்றது என்று தொல்காப்பியரின் களவியலிலும் (தொல்:களவியல்-123) சங்க இலக்கியப்பாடல்களிலும் (உடன் போக்கு நிகழும் பாடல்களில் தலைவி தன் நாண் இழந்து தலைவனுடன் செல்லுதல்) கூறப்படுகின்றன. நாண் இழக்கப்படுகின்றபோது கற்பு இழக்கப்படாது. நாண் இழந்தாலும் ஒரு பெண் தன் கற்பைக் காப்பாற்ற வேண்டும் என்பது தமிழியற் கற்பு நெறி.

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்

செயிர்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல்:களவியல்-123)

நாண் இழந்தேனும் கற்பைக் காப்பாற்றுவது தமிழியம் கூறும் அகத்திணைக் கொள்கை மரபு. சங்க இலக்கியங்களில் நச்செள்ளையார், பெருங்கோப்பெண்டு, காமக்கண்ணியார், ஔவையார்... முதலிய இருபத்தியாறு பெண்பால் புலவர்கள் பாடிய பாடல்களில் வெளிப்படும் உணர்வுகளில் அவர்கள் வெட்கத்தை விட்டு தமது உணர்வை சொல்லியுள்ளனர். சங்கப் பெண் புலவரான பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் சோழன் போர்வைப் பெருநற்கிள்ளி மீது ஏற்பட்ட காதலின் மேலீட்டினால் தானே காமுற்றுக் கூறிய கூற்றுக்களிலும் ஒருவிதமான அச்சமும் நாணமும் வெளிப்படுகின்றதைக் காணலாம். நாண் இழந்து உணர்வை வெளிப்படுத்தினாலும் கற்பையோ

மரபையோ மீறத் தயாராகவில்லை என்பது புலனாகின்றது. ஆனால் ஆண்டாளோ நாண் இழந்து, தன்னை மறந்து நதியின் பிரவாகம் போல அவளின் பாலியல் உணர்வுகள் பொங்கி வழிந்து மோதுண்டு சிந்திச் சிதறுகின்றன. இதனடிப்படையில் ஆண்டாள் நாண் இழந்தாள். நாணைவிட கற்பு உயர்ந்தது என்று கூறும் அகத்திணை மரபில் அவள் கற்பை இழந்தாளா? சங்ககால பெண்பால் புவர்கள் தம் நாணிழந்து வெளிப்படுத்திய உணர்வுபூர்வமான பாடல்களிலும் பார்க்க, ஆண்டாளின் பாடல்கள் பலபடிகள் மேலே சென்று நிற்கின்றன. ஆண்டாள் தன் மனதிலே நிலை நிறுத்தி வாழும் கண்ணன் என்ற ஆண் பிம்பத்திடம் அகமன ரீதியாகத் தன் கற்பைப் பறிகொடுத்த அவளுக்கு அத்தகைய கற்பை உடல் ரீதியாகவும் பறிகொடுக்கத் தயங்கமாட்டாள் என்பது அவளின் பாடல்களிலிருந்து புலப்படுகின்றது. தன் உடலை அவனுக்காகவே மட்டும் அர்ப்பணிப்பதும், இன்னும் பேணி வைத்திருப்பதும் இதற்குச் சான்றுகளாக அமைகின்றன.

“அவரைப் பிராயம் தொடங்கி என்றும்

ஆதரித்து எழுந்தஎன் தடமுலைகள்

துவரைப் பிரானுக்கே சங்கற்பித்து

தொழுவைத்தேன்.....” (நாச். திருமொழி :1.4) என்றும்,

“ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கு என்று

உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்

மானிட வர்க்குஎன்று பேச்சுப்படில்

வாழகில் லேன்கண்டாய்.....” (நாச். திருமொழி : 1.5)

என்றும், திருமாலின் கைகளால் என் வயிறும் கொங்கையும் தீண்டப்படவேண்டும், அத்தகைய தீண்டும் பெரும்பேறு பெற்றவள் இவள் என்ற புகழ் எனக்குக் கிடைக்கவேண்டும் (நா.திருமொழி:1.7) என்றும் திருமாலைப் புணர்வதோர் ஆசையினால் என் கொங்கைகள் பருத்துச் சிலிர்த்து இன்பக் கிளுகிளுப்பை ஊட்டி என்னுயிரை உருக்கித் துன்பம் தருகின்றன (நாச்.திருமொழி:5.7) என்றும் விரகதாபத்தோடு விளம்பும் உணர்வின் அலைகள் கற்புச் சுவரை உடைத்தெறிய முற்படுகின்றன.

ஆண்டாள் கண்ணனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றபோது, கண்ணனின் உடலும் உள்ளமும் தனக்கு மட்டுமே சொந்தமானது என்று உறுதிபட நினைக்கும் அவள் தனக்கு மட்டும் தான் உன்னுடைய இதழ் கொடுக்கும் முத்தமும் அதன் சுவையும் சொந்தம். அதை வேறொருவர் அனுபவித்தால் அல்லது அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றால் நான் பொல்லாதவளாகிவிடுவேன் என்று சங்கிற்கு அச்சுறுத்தல் விடும் அவள் தான் பெற விரும்பியதை சங்கு பெற்றுள்ளதே என்ற ஆற்றாமையும் ஏக்கமும் காரணமாகத் திருமாலின் பாஞ்சசன்னியச் சங்கோடு (வலம்புரிச் சங்கு) தன் ஆதங்கத்தையும் பொறாமையையும் வெளிப்படுத்துகின்றாள். (நாச். திருமொழி: 7.5). கண்ணனின் உதட்டோடு தன் உதட்டைப் பொருத்தி முத்தமிட்டுச் சுவைக்கத் துடிக்கும் அவள் அவனின் வாய்ச்சுவை எப்படியிருக்கும் என்று அறிய ஆதங்கப்பட்டு தினமும் அவன் வாயில் வைத்து ஊதும் சங்கிடமே கேட்கின்றாள் (நாச். திருமொழி: 7.1).

இந்நிலையில், இவரது கவிதையினூடாக வெளிப்பட்டு நிற்கும் உணர்வுப்பிரவாகத்தின் மூலம் பாலியல் நிலைப்பட்ட ஒரு உளவியல் செயற்பாடு வெளிப்படுவதை அவதானிக்கலாம். “ஆண் உடலோடு, உறுப்போடு, சம்பந்தப்படுகின்ற ஆடைகள், அணிகலன்கள் மூலம் பெண் தனது பாலியல் உந்துதல்களைத் தீர்த்துக்கொள்ள முயல்கின்றாள். பருண்மையான ஆணுடலின் இடத்தில் அதனோடு தொடர்புடைய பொருட்கள், பதிலிகள் மூலமாகக் கலவியை நிறைவேற்றும் உளவியல் செயற்பாட்டைப் இவள் பாசுரங்கள் மூலம் அவதானிக்கலாம்” என்ற ராஜ்கௌதமனின் கூற்று இதைத் தெளிவாக்குகின்றது.

காதல் உணர்வும் பாலியல் வேட்கையும் உள்ளத்திலே ஏற்படுகின்றபோது உடலிலும் பல மாறுதல்கள் ஏற்படுவது இயற்கையானது. ஆண்டாளும் தன் மேனி வண்ணம் வெளுப்பதும், மனம் குழைவதும், நாண் அழிவதும், வாய் வெளுப்பதும், பசியின்மையும், மெலிவும், திருமாலின் துழாய் மாலைகொண்டு ஆடினால் தணிந்து விடும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

(நாச்.திருமொழி:12.7) என்கின்றாள். மேலும், விரகதாபத்தினால் ஏற்படும் துன்பத்தினை பதின்மூன்றாம் திருமொழியில் உணர்வு முனைப்புடன் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். பெண்ணின் துயரத்தை அறியாதவனாக இருக்கின்ற கண்ணனுடைய அரையில் கட்டியிருக்கும் பீதாம்பரத்தைக் கொண்டு வந்து என் காமநோயைத் தீர்க்கும்படி வீசச்சொல்லுவதும், அவன் சூடியுள்ள பசுமையான குளிர்ந்த அழகிய சிறப்பமைந்த திருத்துழாய் மாலையைக் கொணர்ந்து என் செறிந்த மென்மை மிகுந்த கூந்தலிலே சூட்டச்சொல்வதும், கண்ணன் அணிந்த வனமாலையினை என் மார்பிலே வெப்பம் தணியுமாறு சூட்டச்சொல்வதும் அவன் திருவாயிலூறிய அமுதத்தால் என் இளைப்பைத் தீர்க்கச்சொல்வதும், அவன் உதட்டை வைத்து ஊதூம் புல்லாங்குழல் வழியே சிந்துகின்ற இதழ் நீரையாவது கொணர்ந்து என் முகம் குளிருமாறு தடவச்சொல்வதும், கண்ணனின் திருவடிப்பொடியை உயிர் போகாமல் துயர்ப்படும் என்மேல் பூசச்சொல்வதும், என் மார்பைக் கண்ணனின் தோளோடு இறுக்கக் கட்டச்சொல்வதும் என்று அவள் கதறும் உணர்வு வெளிப்பாடுகளும் பாலியல் குமுறல்களின் சோகங்களும் ஒரு யுவனால் கூடக் கற்பனை செய்து பார்க்க முடியாத பிராந்தியங்களில் ஆண்டாள் என்ற பெண் எந்தவிதத்தயக்கமுமின்றி சஞ்சாரம் செய்கின்ற அவளின் துணிகரச் செயலைக் காணமுடிகின்றது.

நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தினுள் உள்ளடக்கப்படும் ஆண்டாளின் பக்திசார் கவிதைகளில் வாரணமாயிரம், திருப்பாவை தவிர்ந்த ஏனைய கவிதைகள் யாவும் நாயக - நாயகி பாவனையில் வெளிப்படும் காதல் இலக்கியங்களாக அன்றி, பாலியல்சார் கவிதைகள் (Sexual Poems) என்று கருதும் மனப்பாங்கும் சமூகத்தில் உள்ளதனைக் காணலாம். ஆண்டாள் என்கின்ற பெண்ணால் படைக்கப்பட்டுள்ள கவிதைகள் மூலம் ஒன்றை உறுதிபடச் சொல்லலாம். மொழிதலில் புன்னகை என்ற கருத்தினடியாக தாம் விரும்பும் ஒருவரின் ஆளுமைசார் சிறப்புகளை, தன் உள்ளத்துணர்வுகளை, தீராத ஆசை, வேட்கை என்பவற்றை மொழிவதனூடாக எய்தப்பெறும் இன்ப நிலையையும், நனவிலி மன எண்ணவுணர்வுகளை நனவுநிலைக்குக் கொண்டு வரும் போது சில விடயங்கள் ஒடுக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வெளிவரும் தன்மையையும் அவதானிக்கலாம். சமூகத்தில் வெளிப்படையாகப் பெண்கள் விளம்பமுடியாத இடங்களை ஆண்டாள் தொட்டுக் காட்டுவதும், நீண்டகாலமாக மனதிலே தேக்கிவைக்கப்பட்டு அடக்கப்பட்ட பாலுணர்வின் வெளிப்பாடு அவள் ஒரு பெண் என்பதனால் சோகத்தின் குமுறலாகவும் வெளிப்படுகின்றது. உணவு, நீர் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் போலவே பாலியல் தேவையும் மனிதனுக்கு அத்தியாவசியமானது என்ற உளவியல் சிந்தனைப் பினபுலத்தில் ஆண்டாள் என்ற ஒரு பெண்ணின் இந்த ஒடுக்கப்பட்ட பாலியல் குமுறல்கள் இன்று சமூகத்தில் இளம் விதவைகள், திருமணமாகாத பெண்கள், கணவனைப் பிரிந்துவாழும் பெண்கள், கட்டிளமைப் பெண்கள்........ என்று எத்தனை பெண் வர்க்கங்களின் பொதுமையாகவும் பிரதிபலிப்பாகவும் உள்ளன என்பது சிந்தனைக்குரிய விடயமாகும். இந்நிலையில் ஆண்டாளின் பாடல்கள் பொது மானுடத் தளத்திற்குச் சென்று மனிதகுலத்தின் ஒடுக்கப்பட்ட பாலுணர்வின் ஒட்டுமொத்த வாசிப்பிற்கான இன்னுமோர் தளப்பரிமாணத்தை தந்து நிற்பது தெரிய வருகின்றது.

இந்தவகையில் இறுதியாக, தமிழ் இலக்கியத்தளத்தில் காணலாகும் பெண்படைப்புக்களின் இலக்கியக் கருப்பொருட்களைக் கண்டறியும்போது உணர்ச்சியின் அடிப்படையில் எழும் காதலும் பக்தியும் அவர்களின் கருப்பொருளாயின. சங்கப் பெண்பாற்புலவர்களின் மரபுமீறல்கள் காதலை அடிப்படையாகக் கொண்டன. காரைக்காலம்மையார், ஆவுடையக்காள் போன்றோரின் மீறல்கள் பக்தியை அடிப்படையாகக் கொண்டன. ஆண்டாளின் மரபுமீறல்கள் பக்தி என்ற தளத்தில் நின்று காதலை அடிப்படையாகக் கொண்டதாகும். பக்தியும் காதலும் உணர்வின் அடிப்படையில் எழுவன, கட்டுப்பாடற்றவை, வரம்புகளுக்கும் வரையறைகளுக்கும் உட்படாதவை என்பதனால் தனது உணர்வுகளையும் அனுபவங்களையும் ஆண்டாள் கட்டுப்பாடின்றி பக்தி மூலம் வெளிப்படுத்துகின்றார். அக்காலத்தியச் சமூகத்தின் பொதுத்தளத்தில் ஓரங்கட்டப்பட்ட வாழ்நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக அதாவது உடலை வருத்தியும் மனதை அடக்கியும் எவ்வித இன்ப துன்பங்களையும் பகிர்ந்து கொள்ளவும் முடியாமல் தவித்த பெண்கள், அத்தகைய சூழலில் தங்களுக்கான வடிகாலாகத் தேர்ந்தெடுத்தது பக்திக்களம் தான். இப்பக்திநிலையின் வழியாக உலகியல் துன்பங்களை மறப்பதற்கான மடைமாற்றுத் தளமாகக் கைக்கொண்டவர்களில் ஆண்டாளும் ஒருவர். அதாவது ஒடுக்கப்பட்ட பெண்களுக்கான களமாகப் பக்தி இருந்தது. அவள் பக்தியினூடாக ஒடுக்கப்பட்ட தனது உள்ளக் குமுறல்களையும் சமூகத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரலினையும் வெளிப்படுத்தினாள்.

தமிழ் இலக்கிய வடிவத்தில் கவிதைத் தளத்திலேதான் பெண்களின் பங்கேற்புக்கள் மேலதிகமாகக் காணப்படுகின்றன. பெண்ணுக்குள் அடங்கிக் கிடக்கும் உணர்வுகளை இலகுவாகவும் உணர்வுபூர்வமாகவும் வெளிப்படுத்துவதற்கான களமாக கவிதைத்தளம் அமைந்துள்ளது. பெண்ணுக்கு நெருக்கமாகவும் எளிமையாகவும் அமைந்திருக்கும் கவிதை மொழியிலேதான் பெண்ணின் தன்னனுபவமும் தன்நிலை மொழியும் வெளிப்படுகின்றது என்பதற்கு ஆண்டாளின் பாடல்கள் ஆதாரங்களாக உள்ளன.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

இலக்கியப் படைப்பானது வெறும் இரசனையை மட்டுமோ அல்லது வாசிப்பு நுகர்வை மட்டுமோ தருவதில்லை. மாறாக ஏதாவதொரு கருத்தை அனுபவத்தையும் அது உள்ளடக்கி வைத்திருக்கின்றது. பெண்ணாகப் பாவனை செய்து பாடுவதனை விட, பெண்ணாகவே இருந்து பெண்ணாகவே பாடுவதில்தான் உண்மையும் உயிர்ப்பும் இருக்கமுடியும் என்ற இயற்கையோட்ட அனுபவத்தை ஒரு பெண் படைப்பாளி என்ற வகையில் ஆண்டாள் உணர்ந்திருக்கின்றாள். இங்கு ஆண்டாளின் இயற்கையான பெண்பேச்சு தமிழிலக்கிய மரபிலிருந்து விலகிய மாற்று மரபை முன்னிறுத்துகின்றது. ஆண்வழிசார்ந்த சமூக முறைமைகளின் கட்டுமானங்கள் கருத்தியல் மற்றும் சமூக வாழ்நிலைத் தளத்திலும் ஆழமாக வேரூன்றியிருப்பதனால், மொழியும் அதன்வழி உருவாகின்ற இலக்கியப் படைப்புகளும் ஆண்நோக்குநிலையில் அமைந்திருக்கும் தன்மை கொண்டவை. இத்தகைய சூழலில் படைப்பாளிகளின் கூட்டுக்குரலுக்குள் விரும்பியோ விரும்பாமலோ பெண்ணின் படைப்பாளுமையும் அனுபவமும் அவளின் குரலும் கலந்திருக்கின்றது. ஆயினும், பழந்தமிழ் இலக்கியங்கள் தொடக்கம் நவீன இலக்கியங்கள் வரையிலுமான பதிவுகளில் வெவ்வேறு காலப்பகுதிகள் பற்றியும், அக்காலச் சமூக அமைப்புக்கள் பற்றியும், பெண்களின் அனுபவங்கள் குறித்த தன்னிலைக் குரல்களும் அமைந்திருக்கின்றன என்பதற்கு சங்கப் பெண்பாற்புலவர்கள், காரைக்காலம்மையார், ஆண்டாள் போன்றவர்களின் படைப்புக்கள் சான்றாகும்.

பெண்களின் உணர்வுகளை வெளியிடும் ஆற்றல் நாம் கையாளும் பொது மொழிக்கு இல்லை என்பதனைவிட பெண்களின் உணர்வுகளையும் சிந்தனைகளையும் இப்பொதுமொழியில் வெளிப்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படவில்லை என்று பெண்ணியவாதிகள் கூறுகின்றனர். இதனால் பெண்கள் தங்களின் படைப்புக்கள் வழியாகவே பெண்ணுக்குச் சாதகமான மொழியினை உருவாக்க முடியும் என்றும் பெண் உருவாக்கும் படைப்புக்களுக்கும் ஆண்கள் உருவாக்கும் படைப்புக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுக்கு மொழிக்கூறுகளும் ஒரு காரணமாக அமையும் என்று இவர்கள் கருதுகின்றனர். சமூகத்தில் நிலவும் மொழிக்கூறுகளை அப்படியே வைத்துக்கொண்டு பெண்ணின் தன்நிலை சார்ந்த படைப்புக்களை உருவாக்குவதில் இடர்பாடுகள் உண்டு என்பதனால் மொழிக்கூறில் மாற்றங்களையோ அல்லது புதிய மொழிக்கூறுகளையோ உருவாக்க வேண்டும். இவ்வாறு உருவாக்கும் படைப்புக்கள் சமூக நியதிகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் மாறானதும் முரணானதுமான ஒரு நியதியையும் கோட்பாட்டையும் உருவாக்கும் சமூக மாற்று முயற்சியாக அமையும். இச்சிந்தனைரீதியான மாற்றங்களை மொழியாலேதான் ஏற்படுத்த முடியும் என்பதனை ஆண்டாள் படைப்புக்கள் காட்டுகின்றன. அதாவது இன்றைய பெண்ணியக் கருத்துக்களுக்கு அமைவாக ஆண்டாளும் பெண் பேசும் மொழியின் யதார்த்த நிலைப்பாட்டை தனது பாடல்களில் காட்டுகின்றாள்.

ஒரு பெண்ணின் நனவிலித்தளத்தில் உருவாகும் உணர்வுகளை வெளிக்காட்டுவதற்குப் பல்வேறு சமூகத்தடைகள் மரபுகளின் பேரில் உருவாக்கப்பட்டிருந்தன. பெண்ணின் இயற்கைக் குணாம்சத்தை, இயற்கைக் காதலை, இயற்கைப் பாலியல் விருப்பை, களிப்பையெல்லாம் எக்காரணம் கொண்டும் ஒரு பெண் வெளிப்படுத்தக்கூடாது என்கின்ற கட்டுப்பாடுகள் பெண்ணை இறுக்கநிலையில் வைத்திருந்தன. இந்நிலையில் எதனையும் எப்படியும் வெளிப்படுத்தலாம் என்ற வரையறையற்ற பக்திநிலை என்ற வெளிப்பாட்டுத்தளம் மூலம் ஆண்டாள் தனது அனுவத்தையும் தன்னையும் வெளிப்படுத்தியுள்ளாள். அவளின் பக்தி என்பது உணர்வின் தீவிரத்தன்மையாகவும், காதலின் துயரமாகவும், காதல் வேட்கையாகவும் இருந்தது. பக்தியின் வழியாக ஆண்டாள் அதனைச் சொல்ல முற்படுகின்றாள். உளவியல் அடிப்படையில் ஆணின் நனவிலியைக் காட்டிலும் பெண்ணின் நனவிலியானது அமுக்கப்பட்டதாகவே காணப்படுவதனால், பெண்களை உளவியல்ரீதியாக முடக்கிப்போடும் கற்பிதங்களையும் அமுக்கப்பட்ட மனநிலையிலிருந்து விடுபட்டு பெண்ணின் சுயத்தை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றாள். பெண்ணின் பருவ வயதில் ஏற்படும் பாலியல் துய்ப்புக்கான விருப்பங்கள் கனவுநிலையில் ஏற்படும் இயல்பைத் தனது பாடலில் யதார்த்தமாகக் காட்டி நிற்கின்றாள், ஆண்டாள்.

பெண்களின் அனுபவங்களை ஆராய்வதன் மூலம் பெண்களுக்கே உரிய சில முன்மாதிரிகளை வடிவமைத்தல் அவசியமானது என்பதையும் ஆண்டாளின் பாடல்களில் காணலாம். பெண்ணின் அனுபவம் என்பது அவள் பேசாமடந்தையாக இருத்தல் வேண்டும் என்பதாகும் என்ற மரபை மீறியமையும், பேரின்பத்துய்ப்பை அடைவதற்குரிய வழிவகைகளைப் போதித்த சமண பௌத்த சூழலில் சிற்றின்பம், காதல் என்பவற்றை தனது பக்திநிலைப் பரப்புக்களில் படியச் செய்தமையும் ஆண்டாளின் புரட்சிகரமான அனுபவ மொழியாக வெளிப்படுகின்றது. மானுடம் முழுமைக்குமான காதலை ஆண்களே பாடத்தக்கவர்கள். பெண்கள் பாடக்கூடாது என்ற மரபைமீறித் தனது காதலுணர்வினைப் பாடியுள்ளாள்.



© 2022, IRJTSR 

## உசாத்துணை நூல்கள்:

[1] அருந்தாகரன், க., (1999), ஆண்டாளின் ஆளுமை - சில குறிப்புகள், யாழ்ப்பாணம்.

[2] கோவிந்தராசமுதலியார், க. ரா., (1975), ஆழ்வார்கள் வரலாறு, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[3] சங்கர நாராயணன், சி.டி.,(2006), நாச்சியார் திருமொழி, சென்னை: முல்லை நிலையம்.

[4] சண்முகசுந்தரம், வ., (1992), திருப்பாற்கடல், சண்முகம் பதிப்பகம்.

[5] சாயப்பு மரைக்காயர், மு.,(2005), ஆண்டாள் இலக்கியத் திறன், கங்கை புத்தக நிலையம்.

[6] சிதம்பரனார், சாமி., (1960), ஆழ்வார்கள் அருள்மொழி, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.

[7] சுப்புரெட்டியார், ந., (1987), ஆழ்வார்களின் ஆரா அமுது, ஐந்திணைப் பதிப்பகம்.

[8] செல்வி திருச்சந்திரன்., (1997), தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்ணிலை நோக்கு, குமரன் பதிப்பகம், சென்னை.

[9] தாமோதரன், கு., (1978), ஆழ்வார்கள் திருவுள்ளம், பூங்கொடி பதிப்பகம்.

[10] தில்லைநாதன், சி., (1967), வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

[11] பைம்பொழில் மீரான், (2007), தலைநிமிர்ந்த தமிழச்சிகள், தோழமை வெளியீடு.

[12] மணவாளன், கே. ஏ., (1990), ஆண்டாள், சாகித்திய அக்காதெமி.

[13] நம்மாழ்வார்., (1966), திருவாய் மொழி தெளிவுரை, சேகர் பதிப்பகம்.

[14] நாரயண வேலுப்பிள்ளை, எம்.,(2000), பன்னிரு ஆழ்வார்களும் அவர்கள் அருளிய பிரபந்தங்களும், நர்மதா வெளியீடு.

[15] ராஸ்கௌதமன்., (1997), அறம் அதிகாரம், சென்னை.கட்டுரைகள்:

[16] Palaniyappan, M., (2003), *PeNNiya Vaasippum PeNNezhuththum*, Kaavya Pathippakam.

[17] Prabahari, K., (1987), Aandaal arulich cheytha Naachchiyaar Thirumozhi, Mohan Pathiuppakam

[18] Prema, R., (1998), PeNNiyam - Anugumuraikal, Chennai: Tamil Puththkalayam.

[19] Maharasan, (2010), *Penmozhi Iyangiyal*, Chennai: Thozhamai Veliyeedu.